1987 மே 8]

அரசு பொருட்காட்சிகள்.

637—(*வினா எண்.973)—திரு.செ. செம்மலை மற்றும் திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசால் மாவட்ட தலைநகர்களில் நடத்தப்பட்டு வரும் பொருட்காட்சிகளை எல்லா மாவட்டத் தலைநகர்களுக்கும் விரிவுபடுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதற்காக நடப்பாண்டில் எத்தனை மாவட்டங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 1985–86-ல் கூடுதலாக ஈரோட்டில் பொருட்காட்சி நடத்தப்பட்டது. 1986–87-ல் கூடுதலாக அண்ணா மாவட்டம் திண்டுக்கல்லில் பொருட்காட்சி நடத்தப்பட்டது. மேலும் நடப்பு ஆண்டில் கடலூரில் பொருட்காட்சி நடத்தலாம் என அரசு முடிவு செய்து நடத்தப்பட்டது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுவரை இப்படி மாவட்டத் தலைநகரங்களில் நடத்தப்பட்டு வந்த இந்த பொருட்காட்சிகள் மூலம் அரசுக்கு வந்த நிகர லாபம் எவ்வளவு என்ற விவரத்தையும், சென்னை தீவுத் திடலில் நிரந்தரப் பொருட்காட்சியை அமைப்பதற்கு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் உத்தரவிட்டு இருப்பதாக அமைச்சர் அவர்கள் ஒரு முறை பேசி இருக்கிறார்கள். அப்படி தீவுத் திடலிலே அமைக்கப்படவிருக்கிற, சுற்றுலாத் துறை மூலம் அமைக்கப்படவிருக்கிற அந்த நிரந்தரப் பொருட்காட்சி எவ்வளவு பொருட் செலவிலே அமைக்கப்படவிருக்கிறது என்கின்ற விவரங்களையும், என்னென்ன அம்சங்களைக் கொண்டதாக அந்தப் பொருட்காட்சி அமைய இருக்கிறது என்கின்ற அந்த விவரங்களையும் அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 9—2—1987 வரை இத்துறைக்குக் கிடைத்த நிகர வருமானம் 1 கோடியே 51 லட்சத்து 35 ஆயிரம் ஆகும். மொத்த வருமானம் 5 கோடியே 14 இலட்சத்து 82 ஆயிரம் ஆகும். தீவுத் திடலில் நிரந்தரமான பொருட்காட்சி அமைப்பதற்கு, சுற்றுலாத் துறை மூலம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவர் அவர்கள் சொன்னக் கருத்தை அமல் ஆக்குவதற்காக, புரட்சித் தலைவர் அவர்களே அடிக்கல் நாட்டியிருக்கிறார்கள். விரைவில் அதற்கான பணி துவக்கப்படும்.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்டத் தலைநகரங்களில் நடைபெறும் சுற்றுலாப் பொருட்காட்சிகளினுடைய நாட்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்ற செயற் குறிப்பு உள்ளதா என்பதையும் அதோடு சென்னையிலே அமையவிருக்கின்ற நிரந்தரப் பொருட்காட்சியினுடைய மொத்த மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற லாபத்தின் அடிப்படையில் மாவட்டங்களில் நடத்தப்படும் பொருட்காட்சிகளினுடைய நாட்களை நாம் தற்போது உயர்த்திக்கொண்டுதான் இருக்கிறோம். தீவுத் திடலிலே அமைக்கப்போகிற நிரந்தரப் பொருட்காட்சியைப் பற்றி தனியாக வினா போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. கு. ரமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருட்காட்சிகளை நிரந்தரமாக அமைக்கவேண்டுமென்கிற ஒரு கோரிக்கை இப்போது எழுந்து உள்ளது. சென்னையிலே, தீவுத் திடலிலே ஒரு நிரந்தர பொருட்காட்சியை அமைப்பது என்ற முடிவு உள்ளது. அது நல்லது ; வரவேற்கத்தக்கது. இந்த மாநிலத்திலேயே சென்னையைத் தவிர, அடுத்தபடியாக அதிகப்படியாக பணம் கிடைக்கக்கூடிய இடங்களில் ஒன்று சேலம். அதற்கு அடுத்தபடியாக கோவை நகரம் இருக்கிறது. கோவையிலே இந்த முறை பொருட்காட்சியை நீங்கள் திறந்து வைக்கிற காலத்தில் ஒரு முக்கியமான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அதிகப்படியான பணம் அங்கே வசூல் ஆகக்கூடிய நிலை இருப்பதால், நிரந்தரப்பொருட்காட்சி ஒன்றை கோவையிலே ஏற்படுத்த வேண்டும். அதற்கு கட்டிடங்கள் கட்டுவதற்கு, இன்வெஸ்ட்மென்ட் செய்வதற்கு சில இண்டஸ்டிரியல் ஹவுஸஸ், சில தொழிற்சாலை அதிபர்கள் முன் வரலாம் என்ற நிலை இருக்கிறது. இதை அமைச்சர் அவர்கள் கவனத்தில் வைத்து செயல்படுத்த முன் வருவாரா ?

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது ரஷ்யாவில் உள்ளதைப் போல நிரந்தர 'எக்கனாமிக் எக்ஸிபிஷன்' என்று சொல்லுவது போல நடத்துவதற்காக முதன் முதலில் சுற்றுலாத் துறையின் மூலம் தமிழ்நாட்டின் தலைநகரத்தில் நிரந்தரப் பொருட்காட்சி அமைக்க திட்டம் தீட்டப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டிருக்கிறது. மாவட்டங்கள் தோறும் அதுமாதிரி அமைப்பதற்கு கோவை பொருத்தமான இடமானால் முதல்வரை கலந்துகொண்டு அங்கே தொடங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எப். எம். இராசரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சிறப்பு வாய்ந்த சுற்றுலா மையங்களாக விளங்கிவரும் கன்னியாகுமரி, குற்றாலம், மதுரை போன்ற பல்வேறுபட்ட சுற்றுலா மையப் பகுதி

களில், வெளிமாநிலங்களிலிருந்து வருகின்றவர்களையும், வெளி நாடுகளிலிருந்து வருகின்றவர்களையும் கவருகின்ற வகையில் 'சீசன்' சமயங்களிலாவது சுற்றுலா பொருட்காட்சிகளை அரசு அமைக்கின்ற ஆலோசனை உண்டா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(முற்பகல் 10–40)

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஒவ்வொரு மாவட்டமாகச் சுற்றுலா பொருட்காட்சி நடத்தப்படுவதற்கு திட்டமிட்டு அது செய்தி விளம்பர இலாகா மூலம் மாவட்டங்கள் தோறும் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இதுவரையில் நடத் தப்படாத மாவட்டத்திலே நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. துரை கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே சுற்றுலாப் பயணி களை கவரக் கூடிய பல்வேறு வசதி வாய்ப்புகள் அங்கே இருந் தாலும்—தொன்றுதொட்டு நாள்தோறும் நூற்றுக்கணக்கான வாகனங்களில் வெளிநாட்டவரும், அண்டை மாநிலத்தவரும் வந்து கொண்டிருக்கிறார்கள். அப்படி வந்து கொண்டு இருப்ப வர்களை தஞ்சை மாவட்டத்தினுடைய தலைநகரில், தஞ்சை பகுதியில் முழுமையான அளவில் திருப்திப்படுத்தக்கூடிய அளவில் அங்கே எந்த விதமான வாய்ப்பும் வசதியும் இல்லாத காரணத் தால் அங்கே அவர்களை திருப்திப்படுத்தக்கூடிய அளவுக்கு இந்த பொருட்காட்சியையாவது அமைத்து அவர்களே கவரக்கூடிய அளவுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏதேனும் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விரும்புகிறபடி அங்கே இலாபகரமாக பொருட்காட்சி நடத்தப்படுவது இருக்குமானால் வருகின்ற ஆண்டில் நடத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

வேடசந்தூர் வட்டம் கோவிலூர் தட்சிணதிருப்பதி வெங்கடாசலபதி திருக்கோயில்.

638—(*வினா எண். 3390)— **மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் :** (பேரவைத் துணைத் தலைவர்) மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வட்டம், கோவிலூரில் உள்ள தட்சிண திருப்பதி வெங்கடாசலபதி திருக்கோயிலுக்கு சொந்தமான கட்டிடங்கள், நிலங்களை தனிப்பட்ட நபர்கள் குத்தகைக்கு விட்டு பணம் வசூலித்து வருகிறார்கள் என்பது உண்மையா ?